தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

தை 9, சுக்ல, திருவள்ளுவர் ஆண்டு, 2021
1990, சனவரி 22, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடி மகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.''

புறத்தே தூய்மையாக விளங்குதல் நீரினால் ஏற்படும். அதுபோல், அகத்தே தூய்மையாக விளங்குதல் வாய்மையால் உண்டாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

பவுஞ்சூர் இராமத்தில் காவல் நிலையம் அமைத்தல்.

*277—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், பவுஞ்சூர் கிராமத்தில் காவல் நிலையம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

தமிழ்நாட்டில் குதிரைப் பந்தயம்.

* 413—திரு. பொன். விஜயராகவன் :
திரு. எஸ். டி. உகம்சந்த் :
பேராசிரியர் க. பொன்னுசாமி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படுமா ?